**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

**பெறுநர்,** தேதி : 17.02.2026

ஆசிரியர்,

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புற்றுநோய், ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி விழிப்புணர்வு நிகழ்ச்சி

வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் M/s. Renewable Cogen Globe – EECC (RCG–EECC), சென்னை நிறுவனத்துடன் இணைந்து உலகளாவிய கார்பன் சந்தைகள் மற்றும் கார்பன் சந்தைகளில் வளர்ந்து வரும் வாய்ப்புகள் என்ற பயிலரங்கினை 14–15 பிப்ரவரி, 2026 அன்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. காலநிலை மாற்றம், GHG கணக்கியல், மற்றும் கார்பன் சந்தை செயல்முறைகள் குறித்த அடிப்படை மற்றும் நடைமுறை அறிவை வழங்குவதற்காக இந்த பயிலரங்கு வடிவமைக்கப்பட்டது. மேலும், நிலைத்தன்மை துறையில் உருவாகும் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வுகள் எடுத்துரைக்கப்பட்டது.

வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர் P. ராஜ்குமார், அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி, கார்பன் சந்தைகள் மற்றும் நிலைத்தன்மை சார்ந்த புதுமைகள் முக்கியத்துவத்தை பற்றிக் கூறினார். சென்னை RCG–EECC நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள் தொழில்நுட்ப அமர்வுகளை வழங்கினர். தலைமை நிர்வாக அதிகாரி, Dr. பாலசங்கரி பால்காட் கிருஷ்ணன், உலகளாவிய கார்பன் சந்தைகள் மற்றும் காலநிலை கொள்கைகள் குறித்து விரிவான பார்வையை வழங்கினார். மூத்த திட்ட மேலாளர், Dr. ஸ்ரீனிவாசகம் ரமேஷ், GHG கணக்கியல் கோட்பாடுகள், உமிழ்வு குறைப்பு முறைகள் மற்றும் சந்தை அமைப்புகள் குறித்து விளக்கினார். மூத்த திட்ட மேலாளர், Dr. ராஜராஜேஸ்வரி, காலநிலை தணிக்கைத் திட்டங்கள் மற்றும் நிலைத்தன்மை மதிப்பீடுகள் குறித்து நடைமுறை அனுபவங்களை பகிர்ந்தார்.

முதல் நாள், காலநிலை மாற்றம் & GHG கணக்கியல் அமர்வுகள் நடைபெற்றன. இரண்டாம் நாள், கார்பன் சந்தை செயல்முறைகள் & வாய்ப்புகள் குறித்த அமர்வுகள், வழக்குக் கள ஆய்வுகள் மற்றும் இந்திய சூழல் தொடர்பான விவாதங்களுடன் இடம்பெற்றன. செயற்பாட்டு அமர்வுகள் மற்றும் நிபுணர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல்கள், பங்கேற்பாளர்களுக்கு கோட்பாட்டு அறிவை நடைமுறையுடன் இணைக்கும் அனுபவத்தை வழங்கின. மாணவர்கள் மற்றும் நிபுணர்கள் உற்சாகமாக பங்கேற்று, தொழில் வழிகாட்டல் மற்றும் கார்பன் சந்தை தொடர்பான மதிப்புமிக்க அறிவைப் பெற்றனர்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் (Renewable Energy Engineering) பேராசிரியரும் துறைத் தலைவருமானவர், முனைவர் R. ரமேஷ், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களில் கார்பன் சந்தைகளின் பங்கையும், பசுமைக் காப்பக வாயு (GHG) உமிழ்வு கணக்கீட்டின் முக்கியத்துவத்தையும் விளக்கமாக எடுத்துரைத்தார். இப்பயிற்சி முகாமை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பொறியியல் பேராசிரியர், முனைவர் R. மகேந்திரன்,

**மக்கள் தொடர்பு அலுவலர்**